**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.82/2022**
**PW.4**
**Date: 15.05.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அருள் முருகன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடேசன் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போருர் | வயது | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை;**

1. நான் டாட்டா ஏசி ஓட்டுநராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 29/04/2019 அன்று காலை சுமார் 7.15 மணியளவில் நான் கோவளம் சென்று கொண்டு இருந்தபோது டோல்கேட் முன்பாக போலிசார் பார்த்திபன் என்பவரை போலிசர் பிடித்து

இருந்தார்கள். ஆஜர் 1 ஆம் எதிரிதான் அவர். போலிசார் அவரை விவாரித்து சென்னேரிகுப்பத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு இருந்த மெக்கானிக் shop ல் இருந்து சுமார் 12 இருசக்கர வாகனங்களை போலிசார் கைப்பற்றினார்கள்.

2. அதற்காக என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். **(29/04/2019 தேதியிட்ட 1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ. 8 முதல் 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.82/2022**

**PW.3**

**Date:** 15.05.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கார்த்திக் ராஜா | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | முருகன் | மதம் | |
| கிராமம் | படூர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் டாட்டா ஏசி ஓட்டுநராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 29/04/2019 அன்று காலை சுமார் 8.15 மணியளவில் நான் கோவளம் சென்று கொண்டு இருந்தபோது டோல்கேட் அருகில் இருநபர்களை போலிசர் பிடித்து

இருந்தார்கள். நான் அது குறித்து விசாரித்தேன். இருசக்கர வாகனம் திருட்டு சம்பந்தமாக விசாரிப்பதாக சொன்னார்கள். தற்போது ஆஜரில் உள்ள 1 வது எதிரி தான் அவர் மற்றொருவர் ஓடிவிட்டார்.

2. 1வது எதிரி வாக்குமூலம் கொடுத்தார் அதன் பினனர் போலிசார் என்னை சென்னேரிகுப்பத்திற்கு அழைத்து சென்றார்கள் அங்கு 6 இருசக்கர வாகனங்களை கைப்பற்றினார்கள். Hero Honda splender, Pulser. Honda shine, Honda passion உள்ளிட்ட வானங்களை கைப்பற்றினார்கள். நான் அதற்காக தான் தற்போது காட்டிய கையொப்பம் செய்தேன். **(29/04/2019 தேதியிட்ட 1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ. 5 முதல் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

**DM cum JM/TPR.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.82/2022**
**PW.2**
**Date:** 15.05.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தனசேகரன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | பரமசிவம் | மதம் | |
| கிராமம் | தையூர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை;**

1. நான் தச்சராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(பார்வை மகஜர், 3 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 13/04/2019 அன்று மாலை 7.30 மணியளவில் நான் கேளம்பாக்கம் அரசு மேல்நிலை பள்ளி அருகே அந்த இடத்தை பார்வையிட்டு படம்

வரைந்து என்னிடம் கையொப்பம் பெற்று கொண்டார்கள். அங்கு யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. (**13/04/2019 தேதியிட்ட பார்வை மகஜர், 14/04/2019 தேதியிட்ட 3 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்யில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ,2 முதல் 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.**

2. கடந்த 14/04/2019 அன்று காலை 10.15 மணிக்கு கேளம்பாக்கம் காவல் நிலைய போலிசார் தையூர் செங்கன்மாள் சாலையில் வாகன தணிக்கை செய்தபோது போலிசார் நாகராஜ் என்பவரை என் முன்பாக கைது செய்து விசாரித்தபோது அந்த நாகராஜ் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தங்கள் முன்பு பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமுலத்தின் படி நாகராஜ் ஆஜர் செய்த TN1p3750 பதிவு எண் கொண்ட எமகா இருசக்கர வாகனத்தை போலிசார் தங்கள் முன்பாக கைப்பற்றியதற்கும் அந்த வாக்குமூலத்திலும் மகஜரிலும் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரி நாகராஜ் தற்போது நீதிமன்றத்தில் உள்ளரா என்றால் ஞாபகம் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**S/d- K.Nilavarasan, 15.05.2025**
Taken down by me in open court read over in
the witness in the presence of the accused and
admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**